பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

20 09 2026 SUNDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. செமிகண்டக்டர் உற்பத்தியில், மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மானிய விலையில் வழங்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர் பெறுவதற்கான முன்பதிவிற்கு பயோமெட்ரிக் ஆதார் அங்கீகாரம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
3. பட்டு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மாநில அமைச்சர் திரு. மதன் ராஜா வலியுறுத்தியுள்ளார்.
4. விலைவாசியை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.
5. இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

---------------

செமிகண்டக்டர் உற்பத்தியில், மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

சிப்களை வடிவமைத்து உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உருவெடுத்து வருவதால், ஏற்படும் புவிசார் அரசியல் சார்ந்த இடையூறுகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

செமிகண்டக்டர் துறையின் ஒவ்வொரு பிரிவிலும், கடின உழைப்பு தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

---------------

மானிய விலையில் வழங்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர் பெறுவதற்கான முன்பதிவிற்கு பயோமெட்ரிக் ஆதார் அங்கீகாரம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நடைமுறை அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மானிய விலையில் வழங்கப்படும் எல்பிஜி சிலிண்டர் உண்மையான மற்றும் தகுதியான குடும்பங்களுக்கு மட்டுமே சென்றடைவதை இது உறுதி செய்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*வீட்டு உபயோக சிலிண்டர்கள் வணிக மற்றும் தொழில்துறை பயன்பாட்டிற்குத் சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும், போலியான மற்றும் தகுதியற்ற இணைப்புகளை நீக்குவதற்கு இது உதவிடும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதுவரை, 27 கோடியே 43 லட்சம் பேர் ஆதார் அங்கீகாரத்தை நிறைவு செய்துள்ளதாக பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

---------------

*கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பெருநகர சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக சென்னையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு சமீரன் தலைமையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்தப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மாணவர்கள், பொதுமக்கள், சுகாதாரப் பணியாளர்கள் என அனைவருக்கும் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.*

---------------

*பட்டு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களின் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மாநில சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. மதன் ராஜா வலியுறுத்தியுள்ளார்.*

*தெலங்கானா மாநிலம் தலகொண்டலபள்ளி பகுதியை சேர்ந்த பட்டு வளர்ப்பு விவசாயிகளுடன் அமைச்சர் கலந்துரையாடினார்.*

*பட்டு வளர்ப்பில் முன்னோடியாக திகழும் மாநிலங்களிலிருந்து சிறந்த நடைமுறைகளை கண்டறிந்து செயல்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பை அடுத்து இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த அறிவுசார் பயணத்தில் தமிழகத்தை சேர்ந்த 23 பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.*

---------------

*பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தின்கீழ் முழுமையான கடன் தள்ளுபடி பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. காந்திராஜ் அறிவுறுத்தியுள்ளார்.*

*திருச்சியில் நடைபெற்ற கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.*

*சிங்கப்பெண்கள் கடனுதவி திட்டத்தின் மூலம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கூடுதல் கடன் உதவிகளை வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.*

*நியாயவிலைக் கடைகளில் விநியோகிக்கப்படும் பொருட்களின் எடை அளவில் எவ்வித குறைபாடுகளும் ஏற்பட கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.*

*திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மேலாண்மை நிறுவனத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.*

---------------

*பெண்கள் பாதுகாப்பு மற்றும் இளையோர் நலனில் தமிழக அரசு அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. தென்னரசு தெரிவித்துள்ளார்.*

*காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசினார்.*

*ஊரகப் பகுதிகளை சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் பயனடைந்துவருவதாக அவர் தெரிவித்தார்.*

*தமிழகத்தை முன்னணி மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருவதாக திரு. தென்னரசு கூறினார்.*

---------------

*விலைவாசியை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*சேலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், அஇஅதிமுக ஆட்சி காலத்தில் வறட்சி, கோவிட் தொற்று போன்ற இக்கட்டான தருணங்களில் எந்தவித வரி வருவாயும் இல்லாத சூழலில் விலைவாசி கட்டுக்குள் இருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.*

*மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மாநில அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.*

*தவெக ஆட்சியில் ஈர்க்கப்பட்டுள்ள தொழில் முதலீடு குறித்த வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.*

---------------

*நீலகிரி, கோவை, கடலூர், கிருஷ்ணகிரி, சேலம் உள்ளிட்ட 15 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அடுத்த நான்கு தினங்களுக்கு பரவலாக மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

*இதனிடையே நாகையில் நேற்று பெய்த கனமழை காரணமாக வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*திருவாரூர், திருத்துறைப்பூண்டி, விளமல், வண்டாம்பாளை, மாங்குடி. மாவூர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மாலை கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

---------------

ஐ.நா. உணவு முகமையின் தலைவராக அமெரிக்க வேளாண்துறை அதிகாரி திரு. *Luke Lindberg* நியமிக்கப்பட்டுள்ளார்.

---------------

ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார தடைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் ரஷ்யாவில் நுழைவதற்கான தடைப்பட்டியலில் மேலும் சிலர் சேர்க்கப்பட்டுள்ளதாக அந்நாட் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---------------

ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் தலைநகர் ரியாத்-ஐ குறிவைத்து நடத்திய ஏவுகணை தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

---------------

ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---------------

தில்லியில், வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த முகாம் இன்று நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

---------------

உத்தராகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் உள்ள பத்ரிநாத்தில் இரண்டு நாள் கலாச்சாரத் திருவிழா நேற்று தொடங்கியது.

---------------

சென்னை பட்டினப்பாக்கத்தில், கட்டப்பட உள்ள புதிய தலைமை செயலக கட்டுமான பணிகளுக்கு தடைவிதிக்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

---------------

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் உள்ள ஆதிதிராவிடர் தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகளை மாநில அமைச்சர் திரு.வன்னியரசு திறந்து வைத்தார்.

--சுரேஷ்

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் சேலம் கோட்டம் சார்பில் சிறப்பு பேருந்து சேவையை மாநில அமைச்சர்கள் திரு.விஜய் தமிழன் பார்த்திபன் மற்றும் திரு.லோகேஷ் தமிழ்செல்வன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

---------------

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில், இருசக்கர வாகனத் திருட்டு வழக்கில் தொடர்புடைய இருவரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

---------------

இந்தியா ஏ – ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

*மொகாலியில் இப்போட்டி, பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.*

*----------*

*ஆசிய சீனியர் வுஷு சாம்பியன்ஷிப் போட்டிகளை 2028-ம் ஆண்டில் முதன்முறையாக இந்தியா நடத்துகிறது.*

*இந்தப் போட்டியில், 42 நாடுகளை சேர்ந்த 500 விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*ஜப்பானின் ஐச்சி-நகோயாவில் நடைபெற்ற ஆசிய வுஷு கூட்டமைப்பின் மாநாட்டில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.*

*-------------*

*Uzbekistan-ல் உள்ள Samarkand நகரில் நடைபெற்று வரும் செஸ் ஒலிம்பியாட் போட்டியின், ஓபன் பிரிவில் இந்திய அணி 3-1 என்ற புள்ளி கணக்கில் ஸ்பெயின் அணியை வென்றது.*

*மகளிர் பிரிவில், இந்தியா 3-1 என்ற புள்ளி கணக்கில் மங்கோலியாவை வென்றது.*

*------------*

*மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையேயான பேட்மிண்டன் போட்டிகள் பல்வேறு பிரிவுகளில் நடைபெற்றன.*

*இதில், அசாம் மாநிலம் 5 தங்கப் பதக்கங்களையும்ம், மிசோரம் மற்றும் மணிப்பூர் மாவட்டங்கள் தலா 2 தங்கப் பதக்கங்களையும்*

*வென்றன.*

*<<<<END>>>>*